# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை


## 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதிய

## பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2025.09.22 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)


# இலங்கைக் கட்டடக்கலைஞர் நிறுவகம் (திருத்தம்)

**1976 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைக் கட்டடக் கலைஞர் நிறுவகச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு
அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 29.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2:*** இவ்வாசகமானது (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1976 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை கட்டடக் கலைஞர் நிறுவகச் சட்டத்தின் 7 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு உடன்முற்போந்த நாளன்று நிறுவகத்திற்கான சேர்வு உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்படுபவர்களை நிறுவகத்தின் உறுப்பினர்களாக கருதுவதற்கு ஏற்பாடு செய்வதற்குமாகும்.

***வாசகம் 3:*** இவ்வாசகம் முதன்மைச்சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவினைத்திருத்துகின்றதென்பதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கான விளை வாந்தன்மையினதாகும்.

***வாசகம் 4:*** இவ்வாசகம் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கான விளை வாந்தன்மையினதாகும்.

ச.வ.-ஓ 33/2023

# 1976 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைக் கட்டடக் கலைஞர் நிறுவகச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, இலங்கைக் கட்டடக்கலைஞர் நிறுவகம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1976 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சட்டத்தின் 7 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**2.** (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1976 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைக் கட்டடக் கலைஞர் நிறுவகச் சட்டத்தின் 7 ஆம் பிரிவானது அதன் 1 ஆம் உட்பிரிவில் “நிறுவகத்தின்” என்னும் சொல் தொடக்கம் “வேண்டும்:” என்னும் சொல் வரையிலான எல்லா சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

> “இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பயனுறும் வகையில் நிறுவகத்தின் கூட்டு உறுப்பினர்கள், இணை உறுப்பினர்களையும் மற்றும் உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்:”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில் “சேர் உறுப்பினர் ஒருவர் “க.நிசே (இலங்கை)” என்ற முதலெழுத்துக் களையும்’ என்னும் சொற்களுக்குப் பதிலாக “உறுப்பினர் ஒருவர் “க.நி.உ (இலங்கை)” என்ற முதலெழுத்துக்களையும்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

(2) அதன் (4) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(4) இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, எவரேனுமாள் அல்லது ஆட்கள் குழு "பட்டயம்பெற்ற கட்டக் கலைஞர்" அல்லது "பட்டயம்பெற்ற கட்டக் கலைஞர்கள் என்ற பட்டப்பெயர்களையேனும் அல்லது "க.நி.இ (இலங்கை)" அல்லது "க.நி.உ (இலங்கை)" என்ற முதலெழுத்துக்களையேனும் வைத்திருந்துவரவோ அல்லது பயன்படுத்தவோ அல்லது, அதனை கட்டடக்கலை, வடிவமைப்பு அல்லது கட்டடக் கலையைப் பயிலுதல் அல்லது கட்டடக்கலை என்ற உயர்தொழில் பற்றி எடுத்தாளுகின்ற ஏதேனும் புத்தகம், சஞ்சிகை அல்லது வேறு வெளியீட்டில் பெயராகவோ அல்லது பெயரின் பகுதியாகவோ பயன்படுத்துதலாகாது.".

ஐயங்களைத் தவிர்த்தல்

**4.** ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு உடன் முற்போந்த நாளன்று நிறுவகத்திற்கான சேர்உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பவர்கள் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து பயனுறும் வகையில் நிறுவகத்தின் உறுப்பினர்களாக இருப்பதாக கருதப்படுதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்.